# 14 சந்தான குரவர்

➢ சந்தான → பரம்பரை
குரவர் → ஞானாசிரியர்

தத்துவஞான பரம்பரையில் வந்த ஞானாசிரியர்கள் சந்தான குரவர்கள் ஆவர்.

## சந்தானகுரவர்

### அகச்சந்தான குரவர்



திருநந்தி தேவர்
சனற்குமாரர்
சத்தியஞான தரிசினிகள்
பரஞ்சோதி முனிவர்

### புறச்சந்தான குரவர்



மெய்கண்ட தேவர்
அருணந்தி சிவாச்சாரியார்
மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவாச்சாரியார்

# மெய்கண்ட தேவர்




| | |
|---|---|
| நாடு | திருமுனைப்பாடி |
| ஊர் | திருப்பெண்ணாகடம் |
| தந்தை பெயர் | அச்சுதக்களப்பாளர் |
| தாய் பெயர் | மங்களாம்பிகை |
| இயற்பெயர் | சுவேதனப் பெருமாள் |
| தீட்சா நாமம் | மெய்கண்டார் |
| முத்தியடைந்த தினம் | ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரம் |
| அருளிய நூல் | சிவஞான போதம் |
| குரு | பரஞ்சோதி முனிவர் |
| தலைமை சீடர் | அருணந்தி சிவாச்சாரியார் |
| சீடர்களின் எண்ணிக்கை | 49 |

## சிவஞான போதம்

- ✓ சித்தாந்த சாத்திர நூல்களுள் முதல் நூல்.
- ✓ பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது.

# அருணந்தி சிவாச்சாரியார்




| | |
|---|---|
| ஊர் | திருத்துறையூர் |
| சிறப்புப் பெயர் | சகலாகம பண்டிதர்<br>(ஆகம நூல் பற்றிய ஆழமான அறிவு பெற்றமையால் இப்பெயர் பெற்றார்) |
| அருளிய நூல்கள் | 1. சிவஞான சித்தியார்<br>2. இருபா இருப.்.து |
| குரு | மெய்கண்டார் |
| தலைமை சீடர் | அருணந்தி சிவாச்சாரியார் |
| சீடர்களின் எண்ணிக்கை | 49 |
| முத்தியடைந்த தினம் | புரட்டாதி மாதத்தில் வரும் பூர நட்சத்திரம் |

➢ சிவஞான சித்தியார்

- ✓ சிவஞான போதத்தின் வழி நூல்.
- ✓ பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது.
- ✓ பரபக்கம் , சுபக்கம் எனும் இரண்டு பகுதிகளை கொண்டது
- ✓ "சிவனுக்குமேல் தெய்வம் இல்லை : சித்திக்கு விஞ்சிய நூல் இல்லை" எனும் பெருமை கொண்டது.